செ.வெ.எண்: 94 நாள்:17.02.2018

## திருநெல்வேலி பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் கல்லூரியில் தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் 238 நபர்களுக்கு பணிநியமன உத்தரவு கடிதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

----

திருநெல்வேலி பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இணைந்து தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் இன்று (17.02.2018) நடைபெற்றது. இம்முகாமில் தனியார் நிறுவனங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 238 நபர்களுக்கு பணிநியமன உத்தரவு கடிதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டம் தென்னக ஆக்ஸ்போர்டு என அழைக்கும் வகையில் இங்கு அதிகமான பள்ளி, கல்லூரிகள் உள்ளது. படித்த அனைவருக்கும் அரசு பணிகள் கிடைப்பதில் இயலாத நிலை உள்ளது. அதிகமான தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளது. வேலை தேடும் நபர்களுக்கு வேலைவாய்பை பெற்று தரும் வகையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 19 வட்டங்களிலும் இது போன்ற முகாம்கள் நடத்தப்படவுள்ளது. திருநெல்வேலியில் இன்று நடைபெற்ற முகாமில் 55 தனியார் துறை முன்னணி நிறுவனத்தினர் கலந்து கொண்டனர். இம்முகாமில் மாற்றுத்திறனாளி வேலை நாடுனர்கள் உட்பட 3824 வேலை நாடுனர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் 673 நபர்கள் பணிக்கென தேர்வு செய்யப்பட்டனர். வேலைவாய்ப்பு முகாமில் தனியார் நிறுவனங்கள் மூலம் பணிக்கு தேர்வு செய்யப்பட்டவர்களில் 238 நபர்களுக்கு பணி நியமன கடிதம் வழங்கப்படுகிறது. மேலும் மாற்றுதிறனாளிகளுக்கென தனியாக சிறப்பு அரங்குகளும் அமைக்கப்பட்டன. இவ்விழாவில் அரசு துறை சார்பாக அரங்குகள் அமைத்து துறைசார்ந்த அலுவலர்களால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பணிநியமனம் பெற்றுள்ள நீங்கள் இந்த வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்தி சிறந்த அனுபவங்களை பெற்று, தனி திறமைகளை வளர்த்து பெரிய பதவிகளை அடைய வேண்டும். என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட திட்ட இயக்குநர் திருமதி.கெட்ஸி லீமா அமலினி, ஜான்ஸ் கல்லூரி முதல்வர். திரு.ஜான் கென்னடி தேவராஜ், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.ஹரிபாஸ்கர் மற்றும் அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், தனியார் நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.